


பிறப்பு: ஜனவரி **6, 1967**

இடம்: சென்னை (தமிழ்நாடு)

தொழில்: இசையமைப்பாளர்

## பிறப்பு:

தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில், 1966 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி பிறந்தார். இவருடைய இயற்பெயர் திலீப்குமார் ஆகும். இவருடைய தந்தை பெயர் சேகர். மலையாள இசைத் துறையில் பணியாற்றி வந்தார்.

## ஆரம்ப வாழ்க்கை:

ஏ.ஆர். ரகுமான், தன் இளம் வயதிலேயே தந்தையை இழந்ததால், தன்னுடைய குடும்ப சூழ்நிலைக் காரணமாக தந்தையின் இசைக்கருவிகளை வாடகைக்கு விட்டு, அதன் வருவாயில் இசை கற்க ஆரம்பித்தார். அவருடைய தந்தை இறந்தபோது, அவருக்கு வயது ஒன்பது. ஒருமுறை இவருடைய சகோதரி நோயால் அவதியுற்ற போது, ஒரு முஸ்லீம் நண்பனின் ஆலோசனையின் பேரில் மசூதிக்கு சென்று பிரார்த்தனை செய்ததன் விளைவாக இவருடைய சகோதரி முற்றிலும் நோயிலிருந்து

விடுபெற்றார். இதனால் இவருடைய குடும்பம் இஸ்லாமிய மதத்திற்கு மாறியது. திலீப்குமார் என்ற பெயரை ஏ.ஆர். ரகுமான் என்று மாற்றிக் கொண்டார்.

**இசை பயணம்:**

ஏ.ஆர். ரகுமான், தன்னுடைய பதினொரு வயதில், இளையராஜா இசைக்குழுவில் கீபோர்டு வாசிப்பதற்காக சேர்ந்தார். பின்னர், எம்.எஸ். விஸ்வநாதன், ரமேஸ் நாயுடு, மற்றும் குன்னக்குடி வைத்தியநாதன் போன்ற இசை கலைஞர்களிடமும் பணியாற்றினார். இசைத்துறையில் ஏற்பட்ட ஆவலினால் "ட்ரினிட்டி காலேஜ் ஆஃப் மியூசிக் கல்லூரியில்" கிளாசிக்கல் இசைத்துறையில் இசை பயின்று பட்டமும் பெற்றார். 1992 ஆம் ஆண்டு, மணிரத்தினம் இயக்கத்தில் "ரோஜா" திரைப்படம் மூலம் இசைதுறையில் அறிமுகமானார் ஏ.ஆர். ரகுமான். தன்னுடைய முதல் படத்திலேயே முத்திரைப் பதித்தார். இந்த படம் இவருடைய வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையை தந்தது என்றால் அது மிகையாகாது. இந்த படத்தின் அனைத்து பாடல்களும் பிரபலமானது மட்டுமல்லாமல், முதல் படமே இவருக்கு தேசியவிருதையும் வாங்கித்தந்தது. ரகுமானை தமிழர்கள் மட்டுமல்ல மொத்த இந்தியாவும் 'யார் இந்த இளைஞன்?' என்று கேட்க வைத்தது. பின்னர், இந்தி, தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம் மற்றும் பல மொழித் திரைபடங்களுக்கும் இசையமைத்த இவர் "இசைப்புயல்" எனவும் அழைக்கப்பட்டார்.

**சாதனைகள்:**

1997 ஆம் ஆண்டு, 'மின்சாரக் கண்ணா' என்ற திரைப்படத்திற்கும், 2002 ஆம் ஆண்டு இசையமைத்து வெளிவந்த 'லகான்' திரைப்படத்திற்கும், 2003 ஆம் ஆண்டு 'கன்னத்தில் முத்தமிட்டால்' திரைப்படத்திற்கும், தேசியவிருதுகள் கிடைத்தது. 'ரோஜா' திரைப்படத்திற்கு இசையமைத்தற்காக "தேசியவிருது" மற்றும் "பிலிம்பேர்" விருதும், ஜென்டில்மேன் படத்திற்காக "தமிழ்நாடு மாநில விருது" மற்றும் "பிலிம்பேர்" விருதும், "காதலன்" படத்திற்காக "தமிழ்நாடு மாநில விருது" மற்றும் "பிலிம்பேர்" விருதும், "மின்சார கனவு" படத்திற்காக "தமிழ்நாடு மாநில விருது" மற்றும் "பிலிம்பேர்" விருதும் இவருக்கு வழங்கப்பட்டது. ஏ.ஆர். ரகுமான் தன்னுடைய இசையால் தமிழ் மட்டுமல்லாமல் இந்தி மற்றும் ஹாலிவுட்டிலும் வெற்றிக் கொடி நட்டுள்ளார்.

**ஆஸ்கார் விருதுபெற்ற "ஸ்லம் டாக் மில்லியனியர்":**

2008 ஆம் ஆண்டு, இசையமைத்து வெளிவந்த "ஸ்லம் டாக் மில்லியனர்" என்ற திரைப்படம் இவருக்கு திரைப்படத்துறையில் மிகப்பெரிய விருதான "ஆஸ்கார் விருதை" 2009 ஆம் ஆண்டு பெற்றுத் தந்தது. படத்தின் 'சவுண்ட் ட்ராக்' மற்றும் "ஜெய் ஹோ" பாடல் ஆகியவற்றிற்காக இந்த விருதுகள் வழங்கப்பட்டன. ஆஸ்கார் விருதை பெற்றுக்கொண்டு "எல்லாப் புகழும் இறைவனுக்கே" என தமிழில் கூறிய வார்த்தைகளைக் கேட்டு, தமிழ் கூறும் நல்லுலகம் அவரை உச்சி முகர்ந்து மெச்சி மகிழ்ந்தது. இரண்டு ஆஸ்கார் விருதை பெற்று, இந்தியாவின் புகழை உச்சிக்கு கொண்டு சென்றார். அதுமட்டுமல்லாமல், 2008-க்கான "கோல்டன் குளோப்" விருதும், "பாபடா" விருதும் இத்திரைப்படத்திற்காக வழங்கப்பட்டது. இவ்விருது பெற்ற முதல் இந்தியரும் இவரே.

**ஆல்பம்:**

ஏ.ஆர். ரகுமான் திரைப்படங்கள் மட்டுமல்லாமல், ஆல்பங்களும் வெளியிட்டு வந்தார். 1989 ஆம் ஆண்டு, "தீன் இசை மாலை" என்ற தன்னுடைய முதல் ஆல்பத்தை வெளியிட்டார். 1997 ஆம் ஆண்டு

வெளிவந்த “வந்தே மாதரம்” இவரை புகழின் உச்சிக்கே கொண்டு சென்றது. ரசிகர்கள் மனதில் அவருக்கு தனி இடத்தையும் பெற்றுத்தந்தது. இதுவரை இந்தியாவில் வெளியான சினிமா அல்லாத ஆல்பத்தில் அதிக விற்பனை ஆனது என்று இசை உலகில் கூறப்படுகிறது. பின்னர், இந்தியா, ஹாங்காங், அமெரிக்கா, ஆப்ரிக்கா நாடுகளில் இருந்து குழந்தைகளை வைத்து எடுக்கப்பட்ட “இன்ஃபினிட் லவ்” என்ற ஆல்பம் உலகம் முழுவதும் வெற்றி பெற்றுள்ளது. ‘ஜன கன மன’, ‘இக்னைட்டட் மைன்ட்ஸ்’, ‘மா தூஜே சலாம்’ (அம்மாவுக்கு வணக்கம் – தமிழில்) மற்றும் மேலும் பல ஆல்பங்களையும் படைத்துள்ளார்.

பிற விருதுகள்:

- இந்தியாவின் மிகப் பெரிய விருதான “பத்ம பூசன்” வழங்கப்பட்டது.
- இந்திராகாந்தி தேசிய ஒருமைப்பாட்டு விருது.
- பத்மஶ்ரீ விருது
- லாரன்ஸ் ஆலிவர் விருது
- தமிழக திரைப்பட விருது
- மலேசிய விருது
- ஸ்டேன்ஃபோர்டு பல்கலைக்கழகத்தின் சிறப்பு விருது.
- கோல்டன் குளோப் விருது
- கிராமிய விருது

இசையால், உலகத் திரையுலகை தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தவர், ஏ.ஆர். ரகுமான். அவர் இசையில் மயங்காதார் எவரும் இல்லை. இதனால் உலகம் முழுக்க தனகென்று ரசிகர்களை கொண்டுள்ளார். அவருடைய இசைக்கு இன்றைக்கும் கோடிக்கணக்கான ரசிகர்கள் மயங்கிக் கிடக்கிறார்கள்.

இன்று ஒட்டு மொத்த இந்தியாவிலும் அதிக தேசிய விருதைப் பெற்ற ஒரே இசையமைப்பாளர், இந்த இசை புயல் மட்டுமே.

“உலகத்தரத்தில் ஒரு இந்திய இசையமைப்பாளர் என்றால் அது மிகையாகாது.”

## ``அம்மாவுக்கும் ரஹ்மானுக்குமான பாசம் தெய்வீகமானது!” - உருகும் ரைஹானா

ஆஸ்கர் விருதுகள் வழங்கப்படுவதற்கு முன்பு... `நீங்கள் எப்படி உணர்கிறீர்கள்?' என ஏ.ஆர்.ரஹ்மானிடம் கேட்கப்பட்டது. சற்றும் தாமதிக்காமல் சொன்னார், ``எனக்கொரு அன்னை இருக்கின்றாள்" என்று.

அதாவது, ``நான் இந்த விருதை வென்றாலும் அல்லது வெல்ல முடியாமல் போய்விட்டாலும் என் அன்னையின் அன்பு மாறப்போவது இல்லை. அது போதும் எனக்கு'' என்றார் ரஹ்மான். தாயின் அன்புக்கு நிகராக இந்தப் பிரபஞ்சத்தில் வேறு எதுவுமே இல்லை என்று சொன்ன ரஹ்மானின் மாறா அன்புக்குரிய தாயார் கரீமா பேகம் உடல்நலக் குறைவால் கடந்த 28-ம் தேதி சென்னையில் காலமானார்.

ரைஹானா



ஏ.ஆர்.ரஹ்மானின் குடும்பம் தீரா துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது. ரஹ்மானின் சகோதரியும் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷின் தாயுமான ரைஹானா தன் தாயின் நினைவுகளை இங்கே பகிர்ந்து கொள்கிறார்.

``மூணு பொண்ணுங்க ஒரு பையன்னு மொத்தம் நாலு பிள்ளைங்க... கடைசி பெண் குழந்தைக்கு ஒன்றரை வயசு... இப்படியான சூழல்ல திடீர்னு கணவர் இறந்துபோனா ஒரு பொண்ணோட நிலைமை என்ன ஆகும்? நினைச்சுப் பார்க்கவே முடியாத துயரம் அது. அப்படியான துயரத்தை தன்னம்பிக்கையோட கடந்து வந்து எங்களையெல்லாம் ஆளாக்கினாங்க எங்க அம்மா" உருக்கமாகப் பேச ஆரம்பிக்கிறார் ரைஹானா.

``அம்மாவைவிட அப்பா 12 வயசு பெரியவர். அப்பா இறக்கும்போது அம்மாவுக்கு வயசு 28 தான். அடுத்து என்ன செய்யப்போறோம்னு திக்குத்தெரியாத சூழல்ல, எங்க அப்பா விட்டுட்டுப் போயிருந்த

லேட்டஸ்ட் மியூசிக் இன்ஸ்ட்ரூமென்ட்ஸ்தான் எங்க அம்மாவுக்கு கைகொடுத்துச்சு. அப்போ எங்ககிட்ட இருந்ததுபோல அப்டேட்டடான இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் இங்கே யாருகிட்டேயும் இல்லை. எல்லாருமே ஹார்மோனியம்தான் பயன்படுத்திக்கிட்டிருந்தாங்க. `ப்ரேக் த்ரூ' மாதிரி அப்பா புது டெக்னாலஜியான கீபோர்டை இங்கே அறிமுகப்படுத்தியிருந்தார். அது கச்சேரி நடத்துறவங்க மத்தியில பெரிசா பாப்புலர் ஆச்சு. அதனால அப்பாகிட்ட இருந்த இன்ஸ்ட்ரூமென்டுக்கு நல்ல டிமாண்ட். அதை வாடகைக்கு விட்டுத்தான் கொஞ்ச காலம் எங்க குடும்பம் ஓடுச்சு.

கரீமா பேகம், ஏ.ஆர்.ரஹ்மான்



என்னதான் இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் இருந்தாலும் அதை நிர்வகிக்கிற திறமை வேணும்ல? அந்தக் கருவிகளெல்லாம் அடிக்கடி பழுதாகும். இன்ஜினீயரை தேடிப்பிடிச்சு சரி பண்ணணும். இதற்கிடையில பிள்ளைகளையும் பார்த்துகிட்டு குடும்பத்தை நடத்தணும். எங்க அம்மா அதை ரொம்ப சாதுரியமா பண்ணினாங்க. எங்க தாத்தா பாட்டிக்கு கல்யாணம் ஆகி 15 வருஷம் கழிச்சுதான் எங்க அம்மா பிறந்தாங்களாம். அதனால சின்ன வயசுலயே ரொம்ப செல்லமா வளர்ந்திருக்காங்க. அப்பா இறந்ததுக்குப் பிறகுதான் கஷ்டத்தையே அனுபவிச்சுருக்காங்க. நாலு பிள்ளைகள் மட்டுமல்லாமல் எங்க தாத்தா பாட்டியையும் கவனிச்சுக்க வேண்டிய பொறுப்பும் அம்மாவுக்கு இருந்தது. அதுமட்டுமல்ல எங்க சித்திக்கும் அம்மாதான் கல்யாணம் பண்ணி வைக்க வேண்டியிருந்தது. இப்படிப் பல சவால்களைத் தனி மனுஷியா எதிர்கொண்டவங்க எங்க அம்மா... சுருக்கமா சொல்லணும்னா எங்க அம்மா ஒரு கிரேட் சப்போர்ட்டர்.

சில வருஷங்களுக்குப் பிறகு, எங்ககிட்ட இருந்த இன்ஸ்ட்ரூமென்ட்ஸ்லாம் பழசாச்சு. புதிய கருவிகள் வாங்க முடியாத சூழல். அதுமட்டுமல்லாம, கச்சேரி செய்யறவங்க ஒவ்வொருத்தரும் சொந்தமா இசைக்கருவிகள் வாங்க ஆரம்பிச்சுட்டாங்க. அதனால வாடகைக்கு எடுக்கிறதுக்கான தேவை

குறைஞ்சுபோச்சு. அப்போதான் ரஹ்மானை கீபோர்டு கத்துக்க அனுப்பினாங்க. பத்துப் பதிமூணு வயசுல வாசிக்க ஆரம்பிச்சுட்டார். அவர் ஜீனியஸ். குறுகிய காலத்துலயே நம்பர் ஒன் கீபோர்டு பிளேயரா ஆனார். அதன் பிறகு, நிறைய ஜிங்கிள்ஸ் பண்ணினார். எங்க குடும்பம் பொருளாதார ரீதியா தலையெடுக்க ஆரம்பிச்சது. ரஹ்மான் இசையில இந்தளவுக்கு வளர்ந்திருக்கார்னா அதுக்கு எங்க அம்மாதான் முழு முதற்காரணம்.

குடும்பத்துடன் கரீமா பேகம்




அம்மாவுக்கு ஒரு தெய்வீகத்தன்மை இருந்தது. தீர்க்கதரிசியைப் போல எதிர்காலத்தில் நடக்கப்போறதைத் துல்லியமா கணிச்சிருவாங்க. அவங்க எடுக்கும் முடிவு 90 சதவிகிதம் சரியா இருக்கும். ரஹ்மானுக்கு எலெக்ட்ரானிக் இன்ஜினீயர் ஆகணும்னுதான் விருப்பம். `இல்லை... மியூஸிக்தான் உன்னுடைய பாதை'ன்னு அம்மாதான் திட்டவட்டமா சொன்னாங்க. அவங்க அப்போ அந்தத் தீர்க்கமான முடிவெடுக்கலைன்னா இன்னைக்கு இசைப் புயலா அவர் உருவாகிருப்பாரான்னு தெரியலை. எங்க அம்மா எங்களுக்காக நிறைய தியாகம் செஞ்சிருக்காங்க. ஆனா, அவங்களுக்கு ரஹ்மான்தான் மெயின். அவருக்குப் பிறகுதான் நாங்களெல்லாம். காரணம், நாங்களெல்லாம் அப்பா இல்லாத வலி தெரியாமலே வளர்ந்தோம். அந்த வலிகளை மொத்தமா சுமந்தது ரஹ்மான்தான். அதனாலதான் அம்மா... ரஹ்மான்தான் உலகம்னு இருப்பாங்க. எந்நேரமும் ரஹ்மானுக்காக பிரார்த்தனை செஞ்சுகிட்டே இருப்பாங்க. ரஹ்மானுக்கும் அம்மாதான் உலகம். அவரும் அம்மாவும்

பரஸ்பரம் வெச்சுருந்த பாசம் ரொம்ப ரொம்ப ஆழமானது... தெய்வீகமானது" என்றவர் குரல், தழுதழுக்கிறது.

``ரஹ்மானுக்கு டெக்னாலஜியின் மீது தீராதக் காதல். புதுசா ஏதாவதொரு இன்ஸ்ட்ரூமென்ட் வந்ததுன்னா அதை வாங்கித்தான் ஆகணும். அப்படியான சூழல்ல அதுக்கெல்லாம் அம்மா பயங்கரமா சப்போர்ட் பண்ணுவாங்க. தன்னுடைய நகைகளை அடமானம் வெச்சு அவருக்கு இன்ஸ்ட்ரூமென்ட்ஸ் வாங்கிக் கொடுத்துருக்காங்க. ரஹ்மானும் அந்தளவுக்கு டெடிகேட்டடா வொர்க் பண்ணுவார். பாட்டு ஓகே ஆனதும் முதல்ல அம்மாகிட்டதான் போட்டு காண்பிப்பார். ஒவ்வொரு சிடியும் அம்மா ப்ரே பண்ணிக் கொடுத்த பிறகுதான் வெளியாகும். ரஹ்மான் பீக்குக்கு வந்த பிறகு, அம்மாவுக்கு உள்ளுக்குள்ள பெரிய சந்தோஷம். ஆனா, ஒருபோதும் அவங்க அதை தலையில ஏத்திக்கிட்டதே இல்லை. வெளியில காண்பிச்சதே இல்லை. அந்த வெற்றியை தான் மட்டுமே என்ஜாய் பண்ணணும்னு நினைக்க மாட்டாங்க.

ஏ.ஆர்.ரஹ்மான், கரீமா பேகம்



ஒரு ரெஸ்டாரன்ட் போவோம்... பிக்னிக் போவோம்னு நாங்க எங்கேயுமே போனது கிடையாது. வெளில போனா ஒண்ணு கச்சேரிக்கா இருக்கும்; இல்லைன்னா தர்காவுக்கா இருக்கும். உலகம் முழுக்க நிறைய இடங்களுக்குப் போயிருந்தாலும் அது தர்காவுக்காகவோ, கச்சேரிக்காகவோதான். அவங்க தனக்குன்னு எதையும் ஆசைப்பட்டதே கிடையாது. அவங்க ஏதாவது ஆசைப்பட்டா அது ரஹ்மானுக்காக இருக்கும். அதுக்கப்புறம் மத்தவங்களுக்காக இருக்கும். நிறைய உதவிகள் பண்ணிகிட்டே இருந்தாங்க. உடல்நிலை சரியில்லாதவங்களுக்கு பண உதவி... சாப்பாடு இல்லாதவங்களுக்கு சாப்பாடு போடுறதுன்னு தொடர்ந்து உதவி செஞ்சுகிட்டே இருந்தாங்க.

அம்மாவோட பழைய நினைவுகளையெல்லாம் கிளறும்போது மனசு ரொம்ப வலிக்குது. கிட்னி பிரச்னை வந்து கடந்த சில வருஷங்களாவே அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை. எப்படியாவது சரியாகிடுவாங்க எழுந்து வந்துருவாங்கன்னு நாங்க நம்பினோம். ஆனா, அவங்க உடல்நிலை கொஞ்சம் கொஞ்சமா பின்னடைவைத்தான் சந்திச்சது. ஒரு கட்டத்துக்கு மேல இரண்டு கிட்னியும் பழுதாகிருச்சு. அதன் பிறகுதான் எங்களுக்கு நம்பிக்கை விட்டுப்போச்சு. அவங்களுடைய மரணம் ஒரு வகையில தீராத வலியிருந்து அவங்களுக்கு விடுதலை கொடுத்துருக்குன்னு நினைச்சு ஆறுதல் அடைஞ்சுக்குறோம்.

A.R.Rahman Family



நான் தைரியமா பேசுவேன். கதறி அழுது எனக்கு சோகத்தை வெளிப்படுத்தத் தெரியாது. ஆனா, மனதளவில் ரொம்பவும் பாதிக்கப்பட்டிருக்கேன். என்னால எந்த வொர்க்கும் பண்ண முடியலை. ரஹ்மானும் என்னை மாதிரிதான் எதையும் பெருசா வெளிக்காட்டிக்க மாட்டார். ஆஸ்கர் மேடையில் நின்னுகிட்டு, `நான் எவ்வளவு பெரிய ஆளானாலும் என் அம்மாவுக்கு மகன்தான்'னு சொன்னவர் அவர். அவரும் ரொம்ப உடைஞ்சுபோயிருக்கார். அவர் வலியை வார்த்தைகளால் கடத்திட முடியாது. ரஹ்மானின் பையனும் என்னுடைய இன்னொரு சகோதரி பாத்திமாவின் பிள்ளைகளும் அழுகைய நிறுத்தவே இல்லை. அம்மாவின் வெற்றிடத்தை யாராலும் நிரப்ப முடியாது" என்றார் ஆற்றாமையுடன்.